# பெப்ரவரி – 15 – வியாழன்

## புனித போத்திதுஸ்

## நற்பேறு பெற்றவர் யார்? திபா. 1:1

### முதல் வாசகம் : இணைச்சட்டம்30 : 15 - 20

அக்காலத்தில் மோசே மக்களைப் பார்த்துக் கூறியது: இதோபார், வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்.அது இதுதான் இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய், நீ பலுகுவாய். நீ உடைமையாகக் கொள்ளப்போகும் நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசிவழங்குவார்.ஆனால், உனது உள்ளம் விலகிச் சென்று, நீ செவிகொடாமல் கெட்டலைந்து, வேறு தெய்வங்களை வணங்கி, அவற்றுக்குப் பணிவிடை புரிந்தால்,இன்று நான் உனக்கு அறிக்கையிட்டுக் கூறுகிறேன். நீ நிச்சயம் அழிந்துபோவாய். நீ உரிமையாக்கிக் கொள்ளுமாறு, யோர்தானைக் கடந்து சென்றடையும் பூமியில் உன் வாழ்நாள் நீடித்திருக்காது.உன் மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து, வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உனது வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள்.கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு அவரது குரலுக்குச் செவிகொடு அவரையே பற்றிக் கொள். ஏனெனில், அவரே உனது வாழ்வு அவரே உன் நீடிய வாழ்வு. அதனால், ஆபிரகாம்,ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் மூதாதையருக்குக் கொடுப்பதாக ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் நீ குடியேறுவாய்.

**பதில்பாடல் :** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறு பெற்றோர்.

### நற்செய்தி : லூக்கா 9 : 22 - 25

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, ”மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலைசெய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்” என்று சொன்னார். பின்பு அவர் அனைவரையும் நோக்கி, ”என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என்பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார். ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

**தியானம்:** இன்றைய வாசகத்தில் இயேசுவை சிலுவையிலிருந்து நாம் பிரித்துப்பார்க்க இயலாது என்பதனை தெளிவுபடுத்துகின்றது. சிலருக்கு இயேசுவின் சிலுவைச் சாவு கொடூரமான தண்டனையாக படலாம். வேறு சிலருக்கு அதே சிலுவைச் சாவு கடவுளின் அன்புக்கு அடையாளமாக தெரியலாம். இன்னும் சிலருக்கு சிலுவையில் தொங்கும் இயேசு இன்றைய உலகில் ஒவ்வொரு நாளும் அணு அணுவாக சிதைக்கப்பட்டு நொறுக்கப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களின் அடையாளமாக தென்படலாம். இந்த எல்லா பொருள்களுமே சிலுவையில் அடங்கியுள்ளன. இயேசுவின் சிலுவை அவருடைய வாழ்வையும் சாவையும் நிர்ணயிக்கின்ற அடையாளம். அது போலவே இயேசுவை பின்செல்லும் மனிதரும் சிலுவையைத் தம் வாழ்விலிருந்தும் சாவிலிருந்தும் பிரித்தல் இயலாது. இந்த உண்மையை இயேசு உணர்த்துகின்றார். “சிலுவையைச் சுமத்தல்” என்பது இயேசுவை பின்செல்ல வேண்டிய முறையைக் காட்டுகின்றது. இயேசுவின் துன்பங்களோடு நம் துன்பங்களையும் இணைத்து அவரோடு நம் வாழ்வையும் சாவையும் பிணைத்து நாம் செயல்பட அழைக்கப்படுகின்றோம். சிலுவையில் நிழல் எப்போதும் உண்டு, சிலுவை நம்மோடு என்றும் உள்ளது என்பதைக் காண நம் அக கண்கள் திறக்கப்பட வேண்டும். கடவுளிடம் நம்பிக்கை கொண்டு வாழ்வோருக்கு சிலுவை ஒரு தடையாக இராது. மாறாக இறை அனுபவம் பெற்றிட அது ஒரு வழியாக அமையும் ஆமென்.